# இளந்தளிர்

## நூற்றாண்டுவிழா சிறப்பு மலர்



1909-2009

யா/வட்டு மேற்கு அ.மி.த.க.பாடசாலை

'கற்றாங்கு ஒழுக'

# நூற்றாண்டு சிறப்பு மலர்
## வெளியீடு

# " இளந்தளிர் "

## 1909 - 2009

**வட்டு தென்மேற்கு**
**வட்டுக்கோட்டை**

**A.M.T.M. SCHOOL**
**VADDUKODDAI**

## மலருக்குள்ளே...


1. இறையாசிச் செய்தி...... பிரம ஸ்ரீ இ.சிவசுப்ரமணியசர்மா
2. வரலாறு வளர்ச்சியோடு வளரட்டும்.... வண. T.S.யோசுவா
மானுடம் மகிமையோடு வாழட்டும்
3. வாழ்த்துச் செய்திகள் – ஆசியுரைகள்
4. அதிபரின் செய்தி
5. இதழாசிரியரின் இதயத்திலிருந்து......
6. பாடசாலையின் தோற்றம்
முன்னாள் அதிபர்களின் விபரக்கோவை
அதிபர் ஆசிரியர் விபரம் – 2009
7. அகவை நூறு கண்ட எம் பாடசாலை அன்னை
8. இரண்டாயிரம் ஆண்டிலிருந்து பாடசாலை பற்றிய ஓர் கண்ணோட்டம்
திருமதி S. வேதரஞ்சனி
9. அனுசரித்து போவது எப்படி?
10. உலகமயமாக்கல் என்றால் என்ன? .... செல்வி கி. சுமித்திரா
11. மாணவர்களின் அத்திவாரம் ஆரம்பக் கல்வியே .... திருமதி. ப.பநிரஞ்சன்
12. பாடசாலையும் சமூகமும் ....... திருமதி ப.கமலாதேவி
13. Effective Time Management for Excellent Performance ... Miss N. Malathy
14. ஆங்கிலக் கல்வியின் அவசியம்......... திருமதி ஜெ.கண்ணதாசன்
15. குடும்ப மட்ட போட்டி முடிவுகள்
16. காசநோய் – Tuberculosis....... திரு.சோ.ரூபதாஸ்
( பொது சுகாதார பரிசோதகர் வட்டுக்கோட்டை )

# சமர்ப்பணம்

இப்பாடசாலையின் தோற்றத்திற்கு வித்திட்டவரும்,

வட்டு மேற்கு கிராம மக்களின்


கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்டவருமான

**அமரர்**

**திரு. சின்னப்பு வேதாபரணம் அவர்ளுக்கு**

**இச்சஞ்சிகை சமர்ப்பணம்.**

# பாடசாலையின் வரைபடம் - 2009




# எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய தேவைகள்

பாடசாலையின் ஸ்தாபகர் திரு.சின்னப்பு வேதாபரணம் பெருந்தகை, ஆன்றோர் செப்பிய கல்வியின் பெருமைகளை நன்குணர்ந்து இருந்தபடியால், அவரது இதயத்தில் இச்சூழலில் உள்ள பிள்ளைகளின் கல்வி சிறக்க வேண்டும் என்ற ஒரே தாகம் இருந்தது. அதற்கேற்றவாறு எம் பாடசாலை தூரநோக்கமுள்ளது. ஒரு சில பௌதீகவள விருத்திகளை இனி வருங்காலத்தில் இப்பாடசாலைக்கு ஏற்படுத்தும் போது எமது தூரநோக்கு சாத்தியமாகும். மூடிய தரம் 1,2 வகுப்பறைகள், நூலகம், அதிபர் அலுவலகம், கணனி, விளையாட்டு மைதானம் எல்லை மதில், ஆகியன இவற்றுள் சிலவாகும். இதற்காக 50' x 25' மாடிக்கட்டிடம் ஒன்று அமைக்கப்படுவதோடு 30 பேர்ச் காணியொன்றும் கொள்வனவு செய்யப்படவேண்டும்.

# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய வாழியவே - எங்கள்
வளமார் வட்டுக்கோட்டை மேற்கு
வளர் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலையகம்
வாழிய வாழிய வாழியவே.

சின்னப்பு வேதாபரணனார் தந்தனர்
திகழ்ந்திடப் பள்ளிக் கூடமாமிதனைப்
பொன்னெனப் போற்றுவோம் புகழினைப் பாடுவோம்
புவனியில் வாழிய வாழியவே

செந்நெலும் பயறும் செய்பயிர் யாவும்
செழித்துயர் வயல் வளம் மிக்க பரப்பினில்
தொல்புகழுடனே துலங்கிடு அன்னாய்
தூய்மையுறவே வாழிய வாழியவே

இந்துக் கோயில்கள் கிறிஸ்தவர் திருச்சபை
இலங்கிடும் பல் பொருள் அங்காடிகளும்
சுந்தரமாகச் சூழவரும் அன்னாய்
தூய்மையுறவே வாழிய வாழியவே

மாணவர் யாமெலாம் அன்னைநின் சிறார்கள்
மாண்புடை அதிபர் ஆசிரியர்
தேனினுமினிய செந்தமிழ் பெறுவர்
செழிப்புடன் வாழிய வாழியவே

(வாழிய வாழிய வாழியவே.......)

# இறையாசிச் செய்தி

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

கல்வியை ஊட்டும் பாடசாலைகள் சமுகத்தின் ஒளி விளக்குகளாகும். பெறுதற்குரிய இக்கல்வி எனும் பொக்கிஷத்தை வாரி வழங்கி அறிவுக்கண் திறந்து அகவை நூறினை எட்டி நிற்கும் யா/வட்டு மேற்கு அ.மி.த.க. பாடசாலையின் பெரு விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மிடி மிகுந்த வாழ்வில் ஆன்மா பக்குவம் பெறுவதற்கும் வாழ்க்கையானது சீரிய பாதையில் பயணித்து இறைவனின் பேரருள் கிட்டுவதற்கும் கல்விச்சாலைகள் அடிப்படையான பங்கினை வகிக்கின்றன. மனித விழுமியங்கள் வெள்ளை உள்ளங்களில் விதைக்கப்படும்போது அது வாழ்வு முழுமைக்கும் வழிகாட்டியாக அமையும். இத்தகைய அளப்பரிய பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவரும் கல்விச் சமுகத்திற்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் என்றென்றும் கிடைக்கப்பெற இறைவனைப் பிரார்த்தித்து இறையாசி வழங்குகின்றேன்.

**இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க.**

சுபம்

**இப்படிக்கு**
**அத்தியடிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுரு**
பிரமஸ்ரீ இ. சிவசுப்ரமணியசர்மா

# வரலாறு வளர்ச்சியோடு வளரட்டும்
# மானுடம் மகிமையோடு வாழட்டும்

வட்டு மேற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை 100 வது அகவையில் என் எண்ணத்தின் துளிகளை மலர் இதழ்களாய் படைக்கின்றேன்.

அன்பில் உறைந்து மனிதம் அவனியில்
ஆழமாய் வேரூன்றி தழைக்க வேண்டும்
இமயமாய் உயர்ந்து இதயத்தில்
ஈரம் கொண்ட மனிதர் வாழ வேண்டும்

உறவில் இணைந்த மாணவர் இங்கு
ஊற்றெடுத்து பாயும் நதியாய்
எங்கும் வடிந்தோடி வாழ்வு செழிக்கச்செய்து
ஏக்கமுறும் மானுடம் வாழ்வுபெற கனிதர வேண்டும்


ஐயங்கள் நீங்கிய மாணவர் இங்கு
ஒற்றுமை பேணி ஒழுக்கம் காத்து
ஓதும் சமய ஒழுக்கம் பேணி
ஔடதம் தம் வாழ்வென சிறக்க வேண்டும்.

1909 ஆண்டு அமரர் சின்னப்பு வேதாபரணம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இவ்வருடம் நூறாவது வருடத்தை நினைவு கூருவது மகிழ்ச்சிக்குரிய விடயம். வரலாறு பள்ளங்களையும் மேடுகளையும், வெற்றிகளையும், தோல்விகளையும் கொண்டது. ஆனால் இப்போது இப்பாடசாலையின் வரலாறு வெற்றி சிறந்து காலத்தினால் நுழைய பாடுபட்டுழைக்கும் தற்போதைய அதிபர் திரு. அலோசியஸ் ஸ்ரீபன் றெக்ஸ் அவர்களை மனதார வாழ்த்தி இப் பாடசாலை சமூகத்தில் வைத்திருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
வண. T.S யோசுவா
குரு
மூளாய் திருச்சபை
தென் இந்தியத்திருச்சபை யாழ் ஆதீனம்
08.10.2009

# வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

*அகவை நூறு கண்ட பாடசாலை வளர்க!*



பெருமை மிக்க யா/ வட்டுமேற்கு அ.மி.த.க பாடசாலையின் 100வது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரவுள்ள நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் பேருவகை அடைகின்றேன்.

இப் பாடசாலையின் அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் காட்டும் அக்கறைதான் இன்று இப் பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்கும் மலர் வெளியீட்டிற்கும் ஆணிவேராக திகழ்கின்றது. 100வது ஆண்டினை நிறைவு செய்யும் இப்பாடசாலை சகல வளங்களும் பெற்று வளர்ச்சி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. ப.விக்னேஸ்வரன்**
**வலயக்கல்விப்பணிப்பாளர்**
**வலிகாமம்**

# வாழ்த்துச் செய்தி



தொன்மை வாய்ந்த கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட வட்டுக்கோட்டை கிராமத்தின் கண் அமைந்துள்ள யாழ் வட்டு மேற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடு வதுடன் அதனையொட்டி சிறப்பு மலரினை வெளியிடும் தருணத்தில் அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

1909இல் திரு. சின்னப்பு வேதாபரணம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்வி நிறுவனம் நீண்ட கால கல்விப்பணியினை ஆற்றி வருகின்றது. தற்சமயம் மாணவர் தொகையுயர்ந்து சிறந்ததொரு ஆரம்ப பாடசாலையாக விளங்கி வருகின்றது. அமெரிக்கன் மிஷனரிமாரின் பங்களிப்பும் இப்பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளது.

பாடசாலை வரலாற்றில் இப்படியானதொரு மலர் வெளியிடப்படுவது தனித்துவமான முயற்சி. பாராட்டப்பட வேண்டியதொன்று. இவ்விடயத்தில் பாடசாலை சமூகம் கொடுக்கும் ஒத்துழைப்பினையும் நினைவிற் கொள்கிறேன்.

இனி வருங் காலத்திலும் இப்பாடசாலை சிறப்புற்று வளர வேண்டுமென மகிழ்வோடு கூறி நிற்கின்றேன்.

வளங்கள் பல பெற்று வாழ்க!

**திரு.சு.சுந்தரசிவம்**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர்**
**(நிர்வாகம்)**
**வலிகாமம் கல்வி வலையம்.**

# ஆசி உரை



பண்பாட்டு பாரம்பரியத்தில் கல்வி வழங்குவதற்காக எழுந்த ஒப்பற்ற நிறுவனங்களில் பாடசாலைகளது தோற்றம் விதந்துரைக்கப்பட வேண்டிய தொன்றாகும். இவ்வகையில் வட்டுமேற்கு அ.மி.த.க பாடசாலையும் கிறிஸ்தவ மிசனரிமார்களது வருகையினால் ஏழைப் பிள்ளைகளது கல்வி மேன்மையுற்றமை இலங்கைக் கல்வி வரலாற்றில் அழிக்க முடியாத பதிவுகளாகும். கல்வி என்பது வெறுமனே அடைவு மட்டுமல்ல அது ஒரு கலையுமாகும். அதனை சரிவர நுகரும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அனுபவங்கள் தனித்துவமானவை. ஒரு வகுப்பறையில் குறித்த ஒரு ஆசிரியரிடம் கற்கும் அனைத்து மாணவரும் அவற்றை ஒரே மாதிரி புரிந்து கொள்வார்கள் என்றில்லை. ஒவ்வொருவரது கிரகிப்பு திறனும் வேறுபாடானது சிந்தனையும் வேறுபட்டது. இரசனையும் வேறுபட்டது. கருத்தும் வேறுபட்டது. இந்நிலையில் ஒவ்வொரு மாணவனதும் இயலுமை திறமைகள் இனம் காணப்பட்டு கவனமாக பேணுவதற்குரிய பொறுப்பை உயரிய பண்பை இப்பாடசாலையும் பேணி வருகின்றது என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் தனது செயற்பாடுகளை ஆவணமாக்க முயலும் எங்கள் அதிபர் நூல் வடிவம் கொடுக்க முனைந்தமை வரவேற்கத்தக்க சிறப்பம்சமாகும். அதற்கு ஆசியுரை எழுதுவதில் மிகவும் சந்தோசமும் ஆர்வமும் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இம்மலர் இறுக்கமான ஆவணப்பதிவாகி வரலாற்று ஏடாகி எஞ்ஞான்றும் துலங்க வாழ்த்துகின்றேன்.

**துரை ஏங்கரசு**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்**
**சங்கானை**

# வாழ்த்துச் செய்தி

வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை தனது 100வது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டு ஒரு விழாவையும், அதனையொட்டி **இளந்தளிர** என்ற மலரையும் வெளியிட்டு வைப்பதையிட்டு பெரு மகிழ்வடைகிறேன்.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்கன் மிஷனரிமாரின் கல்விப்பணி, சமுதாயப்பணி, மருத்துவப்பணி ஆகிய பணிகளை நீண்ட காலமாக ஆற்றி இப்பிரதேச வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றிய வரலாறு நீண்டது. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு **திரு. சின்னப்பு வேதாபரணம** அவர்களால் வட்டுக்கோட்டைக் கிராமத்தின்கண் ஆரம்பப் பாடசாலையாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந் நோக்கத்தினை நிறைவு செய்வதற்காக எத்தனையோ தடைகள் இடர்களுக்கு மத்தியிலும் அன்றிலிருந்து இன்றுவரை இப்பாடசாலை தனது பணியை ஆற்றி வருகின்றது. இதற்காக தம்மை அர்ப்பணித்த, உழைத்த உத்தமர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் இன்றும் இப்பாடசாலையில் கல்விகற்கும் ஏழைச் சிறார்களின் அறிவு வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சமுதாயத்தினர் அனைவரது சேவையையும் எண்ணிப் பார்க்கின்றேன். பாராட்டுகின்றேன்.

**வாழ்க உங்கள் பணி!**
**வளர்க உங்கள் பாடசாலை**

**திரு. சி. மாதவகுமாரன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
வலிகாமம் கல்வி வலயம்

# வட்டு மேற்கு அ.மி.த.க. பாடசாலை முன்னாள் அதிபர் திரு. நா. நடராசா அவர்களின் வாழ்த்துச் செய்தி

இன்று யா/வட்டு மேற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை கல்விப் பணியில் ஈடுபட்டு நூற்றாண்டு விழாக் காண்பதில் மகிழ்ச்சியடைபவர்களில் நானும் ஒருவன். இப்பாடசாலையின் அதிபராக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றிய எனக்கு இது ஒரு தித்திக்கும் செய்தியாகும்.

''எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்'' எனும் முதுமொழிக்கு இணங்க மக்கள் எல்லோரும் எண் எழுத்து ஆகிய இரண்டையும் அறிந்திருக்க வேண்டும். அதற்குக் கல்வி அவசியம் இந்த எண், எழுத்து, வாசிப்பு ஆகிய மூன்றையும் முன்னுள்ள கற்றோர்கள் '3R' என அழைப்பர்.

இம் மூன்றையும் இளமையில் இருந்தே கற்க வேண்டும். இதையே நாம் ஆரம்பக்கல்வி என்கின்றோம். இவ்வாறான ஆரம்பக் கல்விப்பணியை 1909ஆம் ஆண்டு இங்கு வாழ் பிள்ளைகள் சரியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனும் பெருநோக்கோடு திருவாளர் சின்னப்பு வேதாபரணம் அவர்கள் தனது இல்லத்தில் ஆரம்பித்தார். "பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதை'' எனும் கூற்றுக்கிணங்க அவர் மனைவியாரும் அவருக்கு உறுதுணையாக இருந்து அவர் பணியை செவ்வனே நிறைவேற்றி வந்தார்.

இவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இவர்களைச் சூழ உள்ள மக்கள் சைவர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்களின் பிள்ளைகள் அவமே காலத்தை கழிக்காமல் ஆரம்பக் கல்வியை இப் பெரியவர்களிடம் கற்று வந்தனர். இவர்கள் சமய வேறுபாடு இன்றிப் பிள்ளைகளின் நல்வாழ்விற்கு அயராது பாடுபட்டு வந்தனர்.

இவர்களின் இல்லத்தில் ஆரம்பித்த பாடசாலை காலப் போக்கில் அமெரிக்க மிஷனால் பொறுப்பு எடுக்கப்பட்டு படிப்படியாக வளர்ந்து இன்று நூற்றாண்டை எட்டி நிற்கின்றது.

1961ஆம் ஆண்டிலிருந்து அரசால் பொறுப்பு ஏற்கப்பட்டும் ஆரம்பப் பாடசாலை யாகவே வளாந்துள்ளது. இப்பாடசாலை அமைந்துள்ள இடப்பரப்பு எக்காரணம் கொண்டும் அதிகரிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளமையால், பௌதீக வளங்கள் போதியளவு பெற முடியாமல் உள்ளது. இருந்தும் காலத்திற்குக் காலம் வழிநடத்திய அதிபர்களின் முயற்சிகள் மாணவர்கள் திறம்பட வழிப்படுத்தப்பட்டதுடன் பாடசாலையும் அபிவிருத்தியடைந்துள்ளது.

எனவே இந்த நூற்றாண்டு மலரை வெளியிடவேண்டும் என்னும் அவாவுடன் தொழிற்படும் அதிபர் அவர்களுக்கு நாம் எல்லோரும் பூரண ஒத்துழைப்பு நல்கி இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைந்து இனிவருங்காலங்களிலும் இம்மக்களுக்கும் சமுதாயத்திற்கும பயன்படவேண்டும் என வாழ்த்தி அமைகிறேன்.

# வாழ்த்துச்செய்தி

## " ஏழ்மையிலும் கல்வி "

வட்டூர் கிராமமதனில் அகவை நூறைக்காணும் பாடசாலைகளில் வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலையும் ஒன்றாக அமைந்துள்ளதை பெருமை கூர்ந்து அதற்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் பெருமை அடைகின்றேன். இப்பாடசாலையில் நான் 8.7.1986 - 8.12.1999 வரை அதிபராக கடமையாற்றியுள்ளேன். அந்த வகையில் இப்பாடசாலையில் கல்விகற்கும் மாணவ மணிகளின் சூழல் சுற்றாடலை நான் நன்கு அறிவேன். அரசாங்கத்தினால் கஸ்டப்பிரதேச பாடசாலையாக அங்கிகரிக்கப்பட்டு இது அமைந்துள்ளதை கல்விச் சான்றோர் அறிவர்.

இப்பாடசாலை இன்று படிப்படியாக முன்னேறி வருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் அது மென்மேலும் வளர்ந்து பல கல்விமான்களை உருவாக்க வேண்டுமென மூன்றாம்பனை வயிரவப் பெருமானின் அருள் வேண்டி ஆசிகளை வழங்குகின்றேன்.


நன்றி

**கி. சிதம்பரநாதன்**
**முன்னாள் அதிபர்**
**(வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலை)**

# எங்கள் அதிபர்



திரு. அ. ஸ்ரீபன் றெக்ஸ் (SLPS III)



# அதிபரின் செய்தி


எமது பாடசாலை தனது நூற்றாண்டு விழாவினைப் பெருமையுடன் கொண்டாடும் இத்தருணத்தில் ''இளந்தளிர்'' என்ற இந்நூற்றாண்டு விழா சிறப்புமலர் வெளியிடப்படுகின்றது. அதற்கு இறைவன் அருள் புரிந்துள்ளமையையிட்டு மகிழ்வு அடைகின்றோம்.

ஆரம்பப் பாடசாலைகள் கிராமப் புறத்திலுள்ள குழந்தைகளின் அறிவுப் பசியாற விருந்தளிக்கின்ற ஊட்டப் பாடசாலைகளாகத் திகழ்கின்றன. கல்வி மனித வாழ்வின் கருவறை தொடங்கி அவனுடனிருந்து அவனுடைய ஆளுமையை வளர்க்கின்றது. எமது பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தின் சங்கானைக் கல்விக் கோட்டத்திலுள்ள முப்பத்திரண்டு பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்ந்து இக்கிராமத்துச் சிறார்கள் தமது கல்வியைத் தொடர உறுதுணையாகவுள்ளது.

அன்று கல்வியின் மகத்துவத்தை ஆன்றோர் புகழ்ந்தனர். தகவல் தொழில்நுட்ப யுகத்தில் வாழும் நாம், எமது கல்வி அதிகாரிகளும் எமது பாடசாலைச் சமூகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கும் உதவியுடன், குழந்தைகளின் பெறுபேறுகள் எல்லாவற்றிலும் உயர்ந்து அவர்கள் மகிழ்வுடன் வாழ வழி சமைப்போம். கைகளில் மலர் தவழட்டும். உள்ளத்தில் பூரிப்பு உருவாகட்டும். வாழ்க! வளர்க! எம் பாடசாலை அன்னை.

**அதிபர்**
**ஸ்ரீபன் றெக்ஸ்**

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து



**"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**

என்னும் பொய்யா மொழிக்கிணங்க ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். இக் கல்விச் செல்வத்தை வழங்கி வரும் எமது பாடசாலையானது **100வது ஆண்டு நிறைவு நாள் மலர் வெளியீடாக இளந்தளிர்** என்னும் சஞ்சிகையை வெளியிடுவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

இளந்தளிர் சஞ்சிகையானது இப்பாடசாலையின் கன்னி மலராக வெளிவந்து தொடர்ந்து ஒவ்வொரு மலராக விரிந்து மணம் வீச எல்லாம் வல்ல இறைவனை வணங்கி தொடங்குகின்றோம்.

மேலும் எமது இந்த மலரிற்கு வாழ்த்துச் செய்திகள், ஆசிச் செய்திகள், ஆக்கங்கள் தந்து இவ் இதழ் சிறப்புற விளங்க வைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எமது நன்றிகள். மேலும் பாடசாலையின் ஆரம்பகால தோற்றம் பற்றிய வரலாற்றை எம்மால் இயன்றளவு முயற்சி செய்து கிடைக்கப் பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கியுள்ளோம்.

மேலும் இந்த இதழினை வெளியிடுவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியிலும் விரைவாக அச்சிட்டு வெளியிட உதவிய புனிதவளன் அச்சகத்தாருக்கும் ஊழியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்னை இப்பணிக்கு ஊக்குவித்து வழிகாட்டிய எங்கள் மதிப்பிற்குரிய அதிபர் திரு. அ. ஸ்ரீபன் றெக்ஸ் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

**செல்வி. க். சுமித்திரா**
**ஆசிரியை**
**யா/வட்டு மேற்கு அ.மி.த.க. பாடசாலை**

# பாடசாலையின் தோற்றம்

வட்டு மேற்கு கிராம மக்களின் வளர்ச்சிக்காக, அம்மக்களை தன்நம்பிக்கையும் அறிவும் உடைய மக்களாக உருவாக்கி நல்லதோர் சமுகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலும், அக்கிராமத்தில் வாழ்கின்ற பெரும்பான்மையினர் பல்வேறுபட்ட பொருளாதார கஷ்டங்களை அனுபவிக்கின்றமையால் தங்களது பிள்ளைகளை தூரப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்க முடியாமையாலும், இக்கிராமத்தில் வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையினர் கூலித் தொழில் செய்பவர்களாகவுமே இருந்தனர். இவர்கள் கல்வியின் மகத்துவத்தை புரிந்து கொள்ள முடியாத மக்களாக இருந்தமையால், அவர்களுக்கு கல்வியின் மகத்துவத்தை உணர வைப்பதற்காக இக்கிராமத்தில் ஓர் பாடசாலையை அமைக்க வேண்டும் என திரு. சின்னப்பு வேதாபரணம் திட்டமிட்டார்.

இப்பாடசாலை ஆரம்ப காலத்தில் வட்டு மேற்கு அரசடியில் தனியார் வளவு ஒன்றில் மூன்று ஓலைக் கொட்டில்களைக் கொண்ட திண்ணைப் பாடசாலையாக, 1909-11-04ம் திகதி சாமுவேல் சின்னப்பு வேதாபரணம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் அதிபராக இவரது துணைவியார் திருமதி அன்னா வேதமணி வேதாபரணம் அவர்களும் உதவி ஆசிரியராக திரு. சின்னப்பு வேதாபரணம் அவர்களும் கடமையாற்றினர்.

சிறிது காலம் சென்றதும் இப்பாடசாலை அமெரிக்கன் மிசன் நிறுவனத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இப்பாடசாலை ஆரம்ப காலம் தொட்டு இற்றைவரை ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்து வரை வகுப்புக்களைக் கொண்டதாக உள்ளது. (இதன் முகாமையாளராக திரு. D.S சாண்டேர்ஸ் அவர்கள் அமெரிக்கன் மிஷனால் நியமிக்கப்பட்டார்). 1960ஆம் ஆண்டு அரசாங்கப் பாடசாலையாகப் பொறுப்பேற்கும் பொழுது இப்பாடசாலை அமெரிக்கன் மிஷனால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1962-04-15ல் அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இப்பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. தியாகராசா அவர்கள் காலத்தில் அவரது பெருமுயற்சியால் முன்னைய மூன்று ஓலைக் கொட்டில்களையும் நீக்கி 60'x20' அளவில் ஒரே கட்டடம் அமைக்கப்பட்டது. அதன் பின் பாடசாலைக் கேற், மூன்று மலசல கூடங்கள் பாட சாலைக்கு அமைக்கப்பட்டுள்ளன. இன்றும் இப்பாடசாலை 60'x20' பிரமாண அளவில் அமைக்கப்பட்ட ஒரே ஒரு கட்டடமாகவுள்ளது.

2008ஆம் ஆண்டு மகிந்த சிந்தனை குடிநீர் வசதித் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதிக்காக மின்மோட்டார் 500L நீர்த்தாங்கியுடன் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் Unicef அனுசரணையுடன் விளையாட்டு முற்றம் (ஊஞ்சல், சறுக்கீஸ், சீசோ, .....) நான்கு உபகரணங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பாடசாலை இன்றைய நவீன உலகத்துடன் ஒப்பிட்டு நோக்குகின்றபோது பௌதீக வளங்களின் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அபிவிருத்திப் பாதையை நோக்கி முன்னேற வேண்டும். என்பதே பாடசாலைச் சமுகத்தின் பேரவாவாக உள்ளது.

# பாடசாலை வளர்ச்சியில் அதிபர்களின் விபரம்

| அதிபர்கள் | பொறுப்பேற்ற காலம் |
|---|---|
| திருமதி. அன்னா வேதாபரணம் | 11-04-1909 |
| 1909 - 1962 வரையான தகவல்கள் கிடைக்கவில்லை | |
| திரு. V. செல்லப்பா | 01-03-1963 |
| திரு. N. கந்தசாமி | 14-03-1968 |
| திரு. V. கதிர்காமத்தம்பி | 14-02-1969 |
| திரு. K. செல்வரத்தினம் | 19-06-1971 |
| திரு. T. சிதம்பரநாதன் | 15-05-1975 |
| திரு. K. செல்வரத்தினம் | 19-01-1976 |
| திரு. K. சிதம்பரநாதன் | 08-07-1986 |
| திரு. N. நடராசா | 10-12-1999 |
| திரு. A. ஸ்ரீபன் றெக்ஸ் | 10-09-2004 |



அதிபருடன் ஆசிரியர் குழாம்
திருமதி ப.நிரஞ்சன், செல்வி கி.சுமிந்திரா, திருமதி ஜெ.கண்ணதாசன்,
திருமதி வே.ஸ்ரான்லி செல்வரத்தினம், செல்வி யசோதா, செல்வி நி.மாலதி,
திருமதி ம.கோபிதாசன், திரு.அ.ஸ்ரீபன் றெக்ஸ் (அமர்ந்திருப்பவர்)



அதிபர் – ஆசிரியர்களுடன் தரம் 5 மாணவர்கள்





**அதிபர்**

திரு. அலோசியஸ் ஸ்ரீபன் றெக்ஸ்

S.L.P.S - III

**ஆசிரியர்கள்**

திருமதி வேதரஞ்சனி ஸ்ரான்லி செல்வரட்ணம்

Pri Trained 2 - II

திருமதி பத்மநாயகி நிரஞ்சன்

Pri Trained 2 - II

செல்வி சுமித்திரா கிருஷ்ணமூர்த்தி

B. A. (Hons) 3 - I

திருமதி மனோரஞ்சிதம் கோபிதாசன்

Pri Trained 2 - I

திருமதி ஜெயசிறி கண்ணதாசன்

B. A. 3 - I (தற்காலிக இணைப்பு)

செல்வி மாலதி நித்தியானந்தம்

B.B.M 3 - I

## சிந்தனைத் துளிகள்

- மனதில் திருப்தி இல்லாதவர்கள் என்றும் ஏழைகளே.
- மனிதனின் முக்கிய தேவைகள் நம்பிக்கையும் பொறுமையும் ஆகும்.
- மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பேசுவானாகில் உலகில் அமைதி நிலவும்.
- வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது, ஒருவேளை வெளிச்சமாகவும் மறுவேளை இருட்டாகவும் இருக்கும்.

எமது பாடசாலை நூற்றாண்டு விழா நீண்ட காலத்தின் பின் எமக்கு முக்கிய மான வைபவமாகவுள்ளது. இப்பாடசாலையை உருவாக்கிய, பாடசாலை ஸ்தாபகர் திரு. சின்னப்பு வேதாபரணம் அவர்களையும், அதன் தொடர்ச்சியாக இதன் முன்னேற்றத்திற்கு உழைத்த அனைவரையும் நினைவு கூருதல் எமது தலையாய கடனாகும்.

வட்டுக்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைகள் இக் கிராமத்துச் சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்கு அளப்பரிய பங்காற்றி வருகின்றன. எமது பாடசாலையும் நூற்றாண்டுகளாக இங்கு சிறந்ததொரு ஆரம்பப் பாடசாலையாக உயர்ந்து நிற்கின்றது.

அது அமெரிக்கன் மிஷனரியினரால் காலப் போக்கில் பொறுப்பேற்கப்பட்டு பாரிய வளர்ச்சி கண்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் ஊட்டப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. அத்துடன் வைத்தியர், பொறியியலாளர் போன்ற கல்விமான்களுக்கு வித்திட்ட கலைக்கூடமாகவுமிருந்து எம் பாடசாலை அன்னையைப் போற்றி, கன்னிப் படைப்பாக இச்சிறப்பு மலரினை நாம் வெளியிடுகிறோம். அதிற் பூரிப்படைகிறோம். புளகாங்கிதம் கொள்கின்றோம்.

இங்கு ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 80 மாணவர்கள் தற்போது கல்வி பயில்கின்றனர். தொடர்ச்சியாக வருடந்தோறும் மாணவர் தொகை அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இப்பாடசாலையில் அதிபருடன் 5 நிரந்தர ஆசிரியர்களும் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியா ஒருவரும் கடமையாற்றுகின்றனர். ஆசிரியர் தேவை பூர்த்தியடைந்துள்ளது.

இங்கு அதிபராகப் பணி புரிந்து ஓய்வு பெற்ற திரு. நா. நடராசா அவர்களும் அதற்கு முன்பு பணிபுரிந்த அதிபர்களும் தம் சேவையைத் திறம்பட ஆற்றியுள்ளனர். பாடசாலை அன்னைக்குப் புகழ் சேர்த்துள்ளனர். பகுதி நேர ஆங்கில ஆசிரியராக கடமைபுரிந்த ஆசிரியர் திருமதி ப. பரமேஸ்வரி மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் செல்வி ப. கவிதா, செல்வி நா. சாந்தினி ஆகியோரும் சிறந்த சேவையாற்றிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பௌதிகவள விருத்தி 2002 கட்டடம் மூடிக் கட்டியமை (ஏற்கனவே 60'x20' திற்குத் கட்டடமாக விருந்தது)

2003 பாடசாலை நுழைவாயில்
2003 மலசலகூடம் - G.T.Z
2006 B Type மேசை, கதிரை - Unicef கிடைத்தமை
2007 மின்சார வசதி - அருட்திரு T.S யோசுவா (தென்னிந்தியத் திருச்சபை)
2007 குடிநீர் வசதி - மகிந்த சிந்தனை
2007 தற்காலிக சமையலறை
2008 சமையலறை உபகரணம் - WFP
2008 விளையாட்டு முற்றம் - Unicef
2008 முற்றத்திற்கு மண் நிரம்பியமை - வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம், ஐக்கிய நாணய சங்கம்.

இவ்வாறான அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் எமது பாடசாலைக்கு கிடைத்துள்ளன.

எம் பாடசாலை முகாமைத்துவத்தில் அதிபரும் அனைத்து ஆசிரியர்களும் இணைந்து நிர்வாகத்திலும் மேற்பார்வையிலும் உதவுகின்றனர்.

மேலும் இங்கு பல செயற்பாடுகள் விருத்தியாக்கப்படவுள்ளன. மாணவர்கள் எண், எழுத்து, விருத்தி நூலக செயற்பாடுகள், ஆங்கில மொழி விருத்தி, விசேட கல்விச் செயற்பாடுகள், கட்டாயக் கல்விச் செயற்பாடுகள், வழிகாட்டலும் ஆலோசனையும், விளையாட்டுப் போட்டிகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பன இவற்றள் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களது சேவையால் மாணவர்கள் ஊக்கம் நிறைந்து விளங்குவர் என்பது வெள்ளிடை மலை.

இவ்வாறு கோட்டமட்டப் போட்டிகள், புலமைப் பரிசிற் பரீட்சை, சைவ பரிபாலன சபைத் தேர்வு முதலியவற்றிலும் மாணவர்கள உயர் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ள முயற்சிகள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப் படுகிறது.

தற்போது பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அதற்காக பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைத்துவக் குழு முதலானவை இயங்கி வருகின்றன. இதன் மூலம் பாடசாலை பெற்றோர், பழைய மாணவர் நலன விரும்பிகள் போன்றோரின் ஒத்துழைப்பு வலுவடையும்.

யா/வட்டு மத்திய கல்லூரி, யா/ வட்டு கார்த்திகேய வித்தியாலயம், யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாலயம், யா/துணவி அ.மி.த.க பாடசாலை, யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம் ஆகியன எமது குடும்பப் பாடசாலைகளாக, மாணவர் நலன் கருதி நடாத்தும் போட்டிகளில் எமக்கு ஆதரவு வழங்குகின்றன.

எம் பாடசாலை அன்னையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வரும் எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள் பாராட்டுக்குரியவர். எமக்கு அந்தந்த நேரத்தில் தேவையறிந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் வலயக் கலிவிப்பணிமனை அதிகாரிகள் எமது சங்கானை கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. துரை எங்கரசு அவர்கள் எமது ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரும் எமது நன்றிக்குரியவர்கள்.

## சிந்தனைத் துளிகள்

- நல்லதை விதை தீயதைப் புதை.
- நான் நேரத்தை பாழ்படுத்தினேன் இப்போது நேரம் என்னைப் பாழ்படுத்துகின்றது.
- மனிதர்களை அன்பினால் அரவணைத்துக் கொள்வதன் மூலமே இலகுவில் வசப்படுத்த முடியும்.

# இரண்டாயிரம் ஆண்டிலிருந்து பாடசாலை பற்றிய ஓர் கண்ணோட்டம்

1909 ஆம் ஆண்டு ஓர் கொட்டகையினுள் சின்னப்பு வேதாபரணம் என்ற ஆசிரியரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலை இன்று யா/வட்டு மேற்கு அ.மி.த.க என்ற பெயருடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வேளையில் இரண்டாயிரம் ஆண்டிலிருந்து இற்றை வரையான செயற்பாடுகளை ஓர் கணம் எடுத்துரைக்க விளைகின்றேன்.

2000ஆம் ஆண்டு முறிந்த படலையுடன் மூடி அடைக்கப்படாத கட்டடத்துடனும் திரு. நா. நடராஜா அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார். அப்போது செல்வி ஐ. தர்சினி தற்காலிக இணைப்பில் செல்வி ஆ. கலைவாணி ஏறத்தாழ நாற்பது மாணவருடன் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். பின்பு இரண்டாயிரம் ஆண்டு ஆவணி மாதம் செல்வி ச. வேதரஞ்சனியும் இரண்டாயிரத் தோராம் ஆண்டு செல்வி ப. பத்மநாயகியும் நியமிக்கப்பட்டனர். செல்வி ஐ. தர்சினி ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்குச் சென்றார். செல்வி ஆ. கலைவாணி தனது சொந்த இடத்தில் கடமையாற்றச் சென்றார். பின்பு வேதரஞ்சனி பத்மநாயகியின் கையில் ஐந்து வகுப்புக்களும் ஓர் கட்டடத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நாற்பது மாணவருக்கும் கல்வி புகட்டி வந்தனர். அவர்கள் மாணவரின் வரவில் அக்கறை கொண்டும் மாணவர் வரவு குன்றிய நிலையிலே காணப்பட்டது. அதற்குப் பரிகாரமாக வீடு வீடாய் சென்று மாணவர்களை அழைத்து வந்தனர். பெற்றோரின் ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை. ஆசிரியர்களினால் காட்சிப்படுத்தப்பட்ட கற்பித்தல் வளங்கள் யாவும் மறுநாள் காலை வந்து பார்க்கும் போது கிழிக்கப்பட்ட நிலையிலே காணப்படும். ஆசிரியர்கள் படும் அவல நிலையைக் கண்டு அதிபரின் அயராத உழைப்பினால் மூடியடைக்கப்பட்ட கட்டடமும், இரும்புப் படலையும் உருவாக்கப்பட்டன. பின்பு அதிபர் மாணவருக்கான கழுத்துப் பட்டியையும், வெள்ளி தோறும் சிவபுராணம் ஓதும் முறையையும் நடைமுறைக்கு கொண்டு வந்தார். இவ்வாறான அரும் பணிகளை ஆற்றி வந்த திரு. நா. நடராசா அதிபர் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு ஓய்வு பெற்றார். பின்பு திரு. அலோசியஸ் ஸ்ரீபன் றெக்ஸ் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார். மாணவர்கள் குடிநீர் வசதி இல்லாது இரண்டு ஆசிரியர்களின் உதவியுடனும் பிஞ்சுக் குழந்தைகள் வாளியில் தண்ணீர் சுமந்து வரும் காட்சி எல்லோர் உள்ளங்களையும் ஓர் கணம் உருக வைத்தன. இக் குறையை நிவர்த்தி செய்ய அதிபர் ஸ்ரீபன் றெக்ஸ் அவர்கள் குடிநீர் வசதி, மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தந்தார். செல்வி நா. சாந்தினி, செல்வி ப. கவிதா ஆகிய ஆசிரியர்கள் கடமையாற்ற வந்தனர். செல்வி ப. கவிதா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் செல்ல செல்வி நா. சாந்தினி வெளிநாடு சென்றார். மீண்டும் வேதரஞ்சனி பத்மநாயகியின் கையிலே தான் கற்றல் பணிகள் தொடர்ந்தன.

மாணவருக்கு விளையாட்டுப் போட்டியும் ஓர் கல்வி தான் என்ற நோக்கில் பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லாத வேளையிலும் யா/வட்டுக் கார்த்திகேய வித்தியாசாலை அதிபர் திரு. நா. சுப்பிரமணியத்தின் உதவியுடன் விளையாட்டுப் போட்டியையும் நடாத்தி வந்தோம். மதிய உணவும் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் மாணவர் வரவில் ஓர் திருப்தி உண்டானது.

2007ஆம் ஆண்டு செல்வி சி. சுமித்திரா (பொருளியல் பட்டதாரி ஆசிரியர்) நியமிக்கப்பட்டார். மாணவர் மீது கொண்ட கருணையினாலும் அன்பினாலும் அரம்பக் கல்வியை திருப்திகரமான கற்றல் செயற்பாடுகளுடன் செய்து வருகின்றார். 2008ஆம் ஆண்டு திருமதி ம. கோபிதாசன், திருமதி ஜெ. கண்ணதாசன், செல்வி நி. மாலதி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இருந்தும் மாணவர் தொகை அதிகரித்து வந்தமையால் ஒரே கட்டடத்தினுள் ஐந்து வகுப்புகளையும் நடாத்தி வருவதில் பல இன்னல்கள் தென்பட்டன. இதனால் இரண்டு கொட்டகை அமைத்து அங்கே ஆசிரியர்கள தமது பணிகளை சிறப்பித்து வருகின்றனர். இரண்டு ஆசிரியர்களுடன் இருந்த பாடசாலை இப்போது ஆறு ஆசிரியர் களைக் கொண்டு பிரகாசிக்கின்றது. பெற்றோரின் ஒத்துழைப்பில் முன்னேற்றமும் மாணவர் வரவு, நேரமுகாமைத்துவம், மாணவர் சுத்தம் என்பன இப்போது உயர்வாகக் காணப்படுகின்றன.

2008ஆம் ஆண்டு எமது பாடசாலை ஆங்கிலப் பாடல், திருக்குறள் மனனம், சஞ்சிகையாக்கப் போட்டி, சித்திரப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றி கோட்ட ரீதியாக இடங்களைத் தட்டிக் கொண்டோம். திருக்குறள் மனனம் வலய ரீதிக்கும் சென்று வந்தது.

தற்போது இப் பாடசாலை வளர்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருக்கிறது. மென் மேலும் பல போட்டியிலும் புலமைப் பரிசில் பரீட்சையிலும் வெற்றி பெற்று இப் பாடசாலையின் பெயர் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட எல்லாம் வல்ல ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி S. வேதரஞ்சனி**
**ஆசிரியை**

# What is Good Teaching?

A. Good teaching is as much about passion as it is about reason. It's about caring for your craft, having a passion for it, and Con veying that passion to every one, most importantly to your students.

B. Good teaching is about listening, question ing, being responsive, and remembering that each Student and class is defferent.

C. Good teaching is also about style Teach ing must be entertaining! Good teachers realize that they are the Conductors and the class is the orchestra.

D. Good teaching is about humor. It's often about making jokes at your own expense, so that students learn you are human with your own share of faults and short Comings.

E. Good teaching is about mentioning bet ween Senior and Junior faculty, teamwork, and being recognized and promoted by one's peers.

# அனுசரித்துப் போவது எப்படி?

சிலபேரைப் பற்றி இப்படி சொல்வது உண்டு! "அடுத்தவங்களை அனுசரித்து நடந்துக்க தெரியலே.... அவன் என்ன சார் மனுஷன்?" சக மனிதர்களோட எப்படிப் பழகுகிறது என்று தெரியாமல் பல பேர் இன்றைக்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். வசதி வாய்ப்புக்கள் இருந்தும் வாழ்க்கை சரியாக இருக்காது. மற்றவர்களிடம் எப்படிப் பேசுவது, பழகுவது என்பதைப் பற்றி தெரியாததினாலேயே இந்த அவஸ்தை! சரி இந்த அவஸ்தை இல்லாமல எப்படி வாழ்வது?. இதற்கு அனுபவசாலிகள சில வழிமுறைகளை கூறியிருக்கின்றார்கள்.

முதலிலே நம்ம நாக்கு, நம்ம கட்டுப்பாட்டிலே இருக்கனும். வார்த்தைகளைக் கொட்டி விட்டு அப்புறம் அள்ளமுடியாமல் கிடந்து கஷ்டப்படக் கூடாது! எப்படிப் பேசுகின்றோம் என்பது முக்கியம். பேசுகின்ற போது எப்படி முகத்தை வைத்திருக்கின்றோம் என்பதும் முக்கியம். அன்பாகப் பேசினாலும் மேலும் சிறப்பாக இருக்கும். அப்படிப் பேசுகின்ற போது ஆதரவாக அவர் தோள்மேலே ஒருகை போட்டு பேசினால் இன்னும் நன்றாக இருக்கும்.

ஒருத்தர் வந்து சார்! அடுத்தவருடைய தோள் மேலே கையை போட்டு அன்பாக பேசனும் என்று கூறினீர்கள். நானும் அப்படித்தான் பேசினேன் அவருடைய முதுகைக் கூட தட்டிக் கொடுத்தேன் என்னுடைய வேலை இல்லாமல் போய் விட்டது. யாரிடம் அப்படிப் பேசினீர்கள் என்று கேட்டேன். என் முதலாளியிடம் என்று கூறினார். சந்தர்ப்பம் சூழ்நிலையை அறிந்து பேச பழகிக் கொள்ள வேண்டும்.

மேலும் இன்னொருத்தர் கிட்ட பேசுகின்ற போது வார்த்தைகளை அள்ளி வீசக் கூடாது. கொடுக்கின்ற வாக்குறுதியை நிறைவேற்ற முடியுமா? என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். கொடுக்கின்ற வாக்குறுதியை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருவரை பாராட்டுகின்ற போது, அபிப்பிராயம் சொல்லுகின்ற போது அது ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும். அது அவருடைய முன்னேற்றத்திற்கு உதவுகின்ற மாதிரி அமைய வேண்டும்.

எந்த விடயத்தைப் பற்றியும் யாருடன் பேசினாலும் வெளிப்படையாக பேச வேண்டும். திறந்த மனதோடு பேச வேண்டும். மூடி மறைத்து மென்று விழுங்கி பேசக் கூடாது. இன்னொருவருடன் பேசுகின்ற போது விவாதம் பண்ணலாம். அது தப்பாக முடியாது. ஆனால் வாதாடிக்கிட்டே இருக்கக் கூடாது. அதாவது Discuss பண்ணலாம் Argue பண்ணக் கூடாது.

எங்களிடம் இருக்கின்ற நல்ல குணங்களை நாமே எடுத்துச் சொல்லக் கூடாது. அந்த நல்ல குணங்களே நம்மைப்பற்றி எடுத்துச் சொல்லுகின்ற மாதிரி நாம நடக்க வேண்டும். அதே போல அடுத்தவர்களிடம் உள்ள தீய குணங்களை பற்றி பேசுவது தப்பு.

உங்களைப் பற்றி யாராவது தப்பாக பேசுகின்றார்களா? அப்படி அவர்கள் பேசுவது உண்மை இல்லை என்றால் அதை பொருட்படுத்தாமல் விடுவதே சிறந்த குணம். ஒரு ஐந்து பேருடன் குழுவாக சேர்ந்து கதைக்கின்ற போது எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். யாரையும் அலட்சியப்படுத்தக் கூடாது. தமாஷாக பேசலாம். ஆனால் நீங்கள் பேசுகின்ற தமாஷால் அடுத்தவர்களுடைய மனதை புண்படுத்துகின்ற மாதிரி அமையக் கூடாது.

நமக்கு கிடைக்க வேண்டியது கிடைக்க வில்லை என்ற தவிப்பு நமக்கு இருக்கக் கூடாது. அது தேவையற்ற ஒன்றாகும். எங்களுடைய செயற்பாடுகள் தெளிவாக இருக்கும் வரை பாராட்டு நம்மை தேடி வரும். இன்னொருவருடைய மனதிலே கௌரவமாக ஒரு இடத்தை பிடிக்க வேண்டு மானால் நாம் இந்தக் குணங்களை கடைப் பிடிக்க வேண்டும். அவ்வாறு பின்பற்றினால் நண்பர்கள் கூட்டம் நம்மை நாடி வரும்.

## சிந்தியுங்கள் உண்மை புரியும்

- **எளிமையும் உண்மையும் எப்போதும் உங்களை உயர்த்தும்.**

- **தூய்மையான நல்ல மனத்தைக் கொண்டவர் மற்றையவர்களிடத்தில் நல்ல பண்புகளைத் தேடுவர்.**
  **அழுக்குகள் நிறைந்த மனத்தைக் கொண்டவர் மற்றயவர்களிடத்தே காணப்படும் அழுக்கான மனத்தையே தேடுவர்.**

- **உனக்கு விருப்பமில்லாத நபரைப் பற்றிச் சிந்திப்பதற்காக ஒரு நிமிடத்தையேனும் செலவழிக்காதே.**

- **என்னிடம் பாதணி இல்லை என்ற கவலை இருந்தது, தெருவிலே கால்கள் இல்லா மனிதனைக காணும் வரை.**

- **மற்றவர்களுக்கு நன்மை செய்வது கடமையல்ல அது ஒரு மகிழ்வு, ஏனெனில் அது எமது சந்தோஷத்தையும் சொந்த ஆரோக்கியத்தையும் அதிகரிக்கும்.**

- **உண்மை என்பது அழகு**
  **அழகு என்பது உண்மை**
  **இதுதான் எமக்குத் தெரிந்தது**
  **எங்களுக்குத் தெரிய வேண்டியதும்கூட**

# உலகமயமாக்கல் என்றால் என்ன?
# What is the Globalization

உலகமயமாக்கல் என்றால் என்ன? என்பது பற்றிய பொதுவான வரைவிலக்கணத்தை நோக்கும் போது பொருளாதார, அரசியல், தொழிநுட்ப, கலாசார தொடர்புகளூடாக ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகவும் ஒருங்கிணைக்கும் செயன்முறையாகும்.

பொருளாதார நோக்கில் உலகமயமாக்கம் என்பது அனைத்து நாடுகளினதும் பொருளாதார செயற்பாடுகள் ஒருங்கிணைந்து தேசிய சந்தைகள் உருவாகி, தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணைக்கும் ஒரு செயன் முறையாகும். அதாவது பொருட்கள், சேவைகள், வெளிநாட்டு முதலீடு, பணம், தொழில் நுட்பம், தொடர்பாடல் என்பவற்றின் அடிப்படையில் நாடுகளது எல்லைகளைத் தாண்டி இடம் பெறும் கொடுக்கல் வாங்கல்களின் அதிகரிப்பின் ஊடாக தேசிய சந்தைகள் ஒன்றிணைந்து உலக சந்தையை உருவாக்குவதன் மூலம் எல்லா நாடுகளும் பொருளாதார ரீதியில் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் செயன்முறை உலகமயமாக்கல் ஆகும்.

**உலகமயமாக்கலுக்கான காரணிகள்:**

**1. பல்தேசியக் கம்பனிகளின் பொருளாதார மேலாதிக்க செயற்பாடுகள்**

அபிவிருத்தியடைந்த நாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக உலகளாவிய ரீதியில் விரிவடையச் செய்தமை. இதனால் குறைவிருத்தி நாடுகளின் மீதான பொருளாதார மேலாதிக்க வாதம் படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

**2. அபிவிருத்தியடைந்த நாடுகளின் கைத்தொழிலில உற்பத்தி திறன் அதிகரித்தமை.**

பல புதிய சேவை கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன, புதிய தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்தன. இதன் காரணமாக தேசிய சந்தைகள் ஒன்றாக இணைந்து உலக சந்தை உருவாகும் நிலை தோன்றியமை.

**3. நவீன தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள்.**

புதிய கண்டுபிடிப்புக்களால் நாடுகளுக்கு இடையிலான காலம், தூரம் தொடர்பான தடைகள் அகற்றப்பட்டமை. மிக விரைவான தொடர்பாடல், போக்குவரத்து முறை, இணையம், மின் அஞ்சல் போன்றன காரணமாக உலகமயமாதல் உருவானது.

**4. நாடுகள் தங்கள் வளர்ச்சிக்காக மற்றவற்றில் தங்கியிருத்தல்.**

இது தொடர்ச்சியாக இருந்து வருகின்றன ஆனால் கடந்த பத்தாண்டுகளில் பரஸ்பரம் தங்கியிருக்கும் தன்மை மேலும் வலிமை பெற்று விட்டது.

**5. மூலதனப் பாய்ச்சல் தொடர்வதற்கான சூழல் வளர்ச்சியடைந்தமை.**

இவற்றுக்கு தடையாக இருந்த காரணிகள் அகற்றப்பட்டமை போன்ற காரணங்களைக் கூறலாம்.

**உலகமயமாக்கலின் அனுகூலங்கள்:**

1. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெருமளவு பிறநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடு களைப் பெறலாம்.

2. நவீன தொழில் நுட்பங்களையும் புதிய கைத்தொழில் அறிவையும் உடனுக் குடன் பெற முடிதல்.

3. இலங்கை போன்ற சிறிய நாடுகள் பாரிய சந்தை வாய்ப்புக்களை பெறுவதன் மூலம் உற்பத்திகளின் பொருளாதார அளவுத்திட்ட சிக்கனங்களின் மூலம் இலாபங்களை பெறக்கூடியதாக உள் ளது. வளர்முக நாடுகளின் உற்பத்தித் திறன் அதிகரித்தல்.

4. மலிவான விலையில் தரமான பொருட் கள் சேவைகளை பெறமுடிதல்.

5. நாட்டு மக்களது சராசரி வருமானம் வாழ்க்கைத் தரம் என்பன உயர்வடைதல்.

6. உள்நாட்டில் வேலைவாய்ப்பு உயர்வடைதல்.

7. வளர்முக நாடுகள் தமது சேமிப்புக்களை யும் கடன் பெறும் வாய்ப்புக்களையும் அதிகரிக்க முடியும்.

8. நாடுகளுக்கு இடையிலான பொருளாதார அரசியல் உறவுமுறைகள் வளர்ச்சி அடைதல்.

**உலகமயமாக்கலின் பிரதிகூலங்கள்:**

1. சர்வதேச நிதிச்சந்தைகளின் நிச்சயமற்ற தன்மையினால் ஆபத்துக்களின் அளவு அதிகரிக்கின்றமை.

2. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் இளம் பருவக் கைத்தொழில்கள் பாதிப்படைதல்.

3. வளர்முக நாடுகள் பொதுவாக சார்பு நிலைப் பொருளாதாரங்களாகவே காணப் படுகின்றன. உலகமயமாதலின் விளை வாக இச் சார்பு நிலை பொருளாதாரம் மேலும் பலவீனம் அடையும்.

4. பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத் திற்கு உட்பட வேண்டிய நிலையில் இருத்தல். அரசுகளை பல்தேசிய கம்பனி கள் கைப்பொம்மையாக்கல்.

5. வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கின்றது.

6. சுதந்திரமாக பொருளாதார கொள்கையை பின்பற்றுவதற்கு நாடுகளின் நிபந்தனை கள் தடையாக உள்ளன.

7. தேசிய அரசின் முக்கியத்துவம் குறைக் கப்படுவது பல்துறைகளின் அரசின் பங் களிப்பு பணியை பாதிக்கும்.

8. நாட்டின் உற்பத்தி இயலளவை விட கூடுதலாக நுகர தூண்டப்படுவதால் சென்மதி நிலுவை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

9. இயந்திர சாதனப் பயன்பாடு வேலையின் மையை அதிகரிக்கும்.

10. நாடு தன்னிறைவுப் பொருளாதாரத்தின் வலிமையை இழந்து விடுகின்றமை இத னால் கிராமியப் பொருளாதாரம் பாதிக் கப்படுகின்றமை.

**உலகமயமாக்கலால் ஏற்படும் தீங்குகளைக் குறைக்க ஒரு நாடு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:**

1. நிதியியல்துறை ஒழுங்கு விதிகளும் மேற்பார்வையும்.

2. தேவையற்ற பொருட்களைக் குவித்தல், கொள்ளைலாபம் பெறல், விலையிடல் என்பவற்றைத் தடுத்தல்.

3. ஒருங்கிணைக்கும் நம்பிக்கைக்கும் எதிரான சட்டங்கள்.

4. உலகமயமாக்கல் செய்முறையுடன் சமுகத் தேவைகள் இணைக்கப்பட வேண்டும்.

5. சட்டரீதியற்ற வழியிற் பெற்ற பணத்தை சட்டரீதியாக மாற்றுவதற்கு எதிரான நடவடிக்கைகள்.

6. சுற்றுச் சூழல், மூலவளங்களின் பாதுகாப்பு என்பவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**ஆசிரியை**
**செல்வி கி. சுமித்திரா**

**ஒருவர் எதனையும் பணிவுடன் சமாளிக்கத் தெரிந்திருந்தால்**
**அவன் மிகவும் பெருந்தன்மை கொண்டவராவான்.**

# புன்சிரிப்பு (Smile)

சிரிப்பு என்பது குறைந்துவிடாது எதையும் உருவாக்குவதுதான் அதிகம். இது தருபவரை வறியவராக்காமல் பெறுபவரை வளமாக்கி விடும். அது மின்னல் கீற்றென நடந்துவிடும். அதன் நினைவுகளோ என்றென்றும் நீடித்து நின்றுவிடும். இதுவின்றி வாழும் அளவிற்கு ஒருவரும் செல்வந்தரும் இல்லை. இதன் பயனை அடைய முடியாத அளவிற்கு எவரும் வறியவரும் இல்லை.

இப்புன்சிரிப்பானது:

- இல்லங்களில் சந்தோஷம் தரும்.
- ஸ்தாபனம், பொது இடங்களில் நல்லெண்ணம் வளர்க்கும்.
- சோர்விற்கு ஓய்வாகும்.
- ஊக்கமின்மைக்கு ஒளியாகும்.
- மாணவர்களுக்கு இயற்கை தரும் முறிவு மருந்தாகும்.
- நண்பர்களின் உறுதிக் கைபெழுத்தாகும்.

இருந்தும் இதனைப் பிச்சையாகப் பெறவோ, வாங்கவோ, கடனாய்ப் பெறவோ அல்லது திருடவோ முடியாது. அது கொடுக்கப்படாத வகையில் எவருக்குமே பயனில்லாத ஒன்றாய் இருப்பதனால் காலை பொழுதினூடே உங்கள் மாணவர்களில் நண்பர்களில் சிலர் சோர்வாய் இருப்பின் உங்களைப் பார்த்துச் சிரிக்காமல் இருக்கலாம். உங்களது புன் சிரிப்பினில் ஒன்றை அவர்களுக்குத் தாருங்கள், மேற்கூறியவற்றில் ஆரோக்கியம் பெறுவார்கள்.

**ம. கோபிதாசன்**

# 10 Rules of Human Relations

- **Speak to People:**
  There is nothing so nice as a cheerful word of greeting.

- **Smile at People:**
  It takes 72 muscles to frown, only 14 to smile.

- **Call People by Name:**
  The sweetest music to any one's ears is the sound of his own name.

- **Be Friendly and Helpful:**
  If you would have Friends, be a Friend.

- **Be Cordial:**
  Speak and act as if every thing you do is a genuine pleasure.

- **Be Genuinely Interested in People:**
  you can like almost everybody if you try.

- **Be Generous:**
  with praise - cautions.

- **Be considerate:**
  with the feelings of others. There are usually three sides to a controversy yours, the other person's and the right side.

- **Be Alert:**
  to give Service. What counts most in life is what we do for others.

- **Add to this a Good sense of Humour:**
  A big does of patience and dash of humbling and you will be rewarded many fold.

Never Stop Listening
Never Stop Learning
Never Stop Training

# ஆக்கங்களும் ஆக்கியோரும்

| | |
|---|---|
| ஆத்திசூடி | ஔவையார் |
| இராமாயணம் | வால்மீகி புலவர் |
| கந்தபுராணம் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| சத்தியசோதனை | மகாத்மாகாந்தி |
| சிலப்பதிகாரம் | இளங்கோ அடிகள் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| திருக்குறள் | திருவள்ளுவர் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| திருவிளையாடல் | பரஞ்சோதி முனிவர் |
| நற்சிந்தனை | யோகர் சுவாமிகள் |
| நளவெண்பா | புகழேந்திப் புலவர் |
| பகவத்கீதை | வேதவியாசர் |
| பாஞ்சாலி சபதம் | பாரதியார் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| மகாபாரதம் | வியாசர் |

*செ. தினேஸ்*
*தரம் 5*

## குடும்பமட்டப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டி

*2009 தனிப்பாடல் - ஆங்கிலம்*

| | | |
|---|---|---|
| தரம் | 2 | முதலாமிடம் - தே. சனுஜன் |
| தரம் | 3 | மூன்றாமிடம் - மோ. தேனுஷா |
| தரம் | 4 | மூன்றாமிடம் - சு. நிசாந்தினி |

*2009 குழுப்பாடல் - ஆங்கிலம்*

| | | |
|---|---|---|
| தரம் | 2 | இரண்டாமிடம் |
| தரம் | 3 | முதலாமிடம் |

# பொது அறிவு

**1. முட்டைகளை அடைகாக்கும் ஆண் பறவை எது?**
எமு (Emu) என்ற பறவை அவுஸ்திரேலியாவில் உள்ளது. இது தீக்கோழி போன்றது.

**2. பறக்க முடியாத பறவைகள் எவை?**
தீக்கோழி, எமு, பென்குயின் என்பன பறக்க முடியாதவை. இவை பருத்த குண்டான உடலைக் கொண்டுள்ளன. அவற்றின் கால்கள் வேகமாக ஓடத்தக்கனவாக வலுப் பெற்றுள்ளன.

**3. கரப்பான் பூச்சியின் இரத்தம் என்ன நிறம்?**
வெள்ளை

**4. மிருகங்களில் மிக வேகமாக ஓடக்கூடியது எது?**
சிறுத்தை மணிக்கு 112 கி.மீ, வேகத்தில் ஓடும், கருமான் மணிக்கு 95 கி.மீ, சிங்கம் மணிக்கு 88 கி.மீ, வேகத்தில் ஓடும்.

**5. நீரில் வாழ்கின்ற மிகப்பெரிய பாலூட்டி எது?**
திமிங்கலம்

**6. குரைக்காத நாய் எது?**
அவுஸ்திரேலியாவில் உள்ள டிங்கோ (Dingo) என்ற நாய்.

**7. உலகிலே வாழும் மிகப்பெரிய பறவை யாது?**
தீக்கோழி 8 அடி வரை உயரமாக வளரக் கூடியது.

**8. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் எது?**
ஈசல்

**9. கண்கள் மூலம் சத்தத்தை கேட்கும் ஈருடக வாசி எது?**
தவளை

**10. இனிப்பின் சுவையை அறிய முடியாத விலங்கு எது?**
பூனை

**11. 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நாடு எது?**
இங்கிலாந்து

**12. இலங்கை அரசு 2009ஆம் ஆண்டை என்ன ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது?**
ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது.

**13. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களுக்கான 45 மில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்துள்ள சர்வதேச நிதி நிறுவனம் எது?**

உலக வங்கி

**14. ஆறாவது ஆசிய பாதுகாப்பு மகாநாடு 2004 ஜனவரி மாதம் எங்கு நடைபெற்றது?**

இந்தியாவின் தலைநகராகிய புதுடில்லியில்

**15. "நவீன மருத்துவத் தாதித் தொழிலின் தாய்" எனப் பகழ் பெற்றவர் யார்?**

நைட்டிங்கேல் (Nightingale) அம்மையார் (1820 - 1910) ஆவர் இத்தாலியில் பிறந்து இங்கிலாந்தில் வளர்ந்தவர்.

---

# விடுகதைகள்

**1. தரையில் போட்டால் எடுக்க முடியாது, எண்ணெயில் போட்டால் வெடிப்பான் அவன் யார்?**

கடுகு

**2. கட்டாத வேலி என்ன வேலி?**

திருநெல்வேலி

**3. பச்சைக் கிளி பறக்க முடியாத கிளி, கொப்பில் இருக்கும், ஆனால் மூக்கு சிவப்பு அல்ல அது என்ன?**

மாங்காய்

**4. பகலெல்லாம் ஊரைச்சுத்துவான், இரவில் வீட்டுக்குள் ஒடுங்கிக் கிடப்பான் அவன் யார்?**

செருப்பு

**5. சிவப்புச் சட்டைக்காரன், உள்ளே மஞ்சள் முத்துக்காரன் ஆனால் மிகுந்த ரோசக்காரன், அவன் யார்?**

மிளகாய்

**6. வெள்ளைப் பாம்பு கல்லை தூக்குகிறது அது என்ன?**

புடோலங்காய்

**இ. கஜேந்தினி**
**தரம் - 5**



அதிபர் - ஆசிரியருடன் தரம் 1 மாணவர்கள்



அதிபர் - ஆசிரியருடன் தரம் 2 மாணவர்கள்



அதிபர் - ஆசிரியர்களுடன் தரம் 3 மாணவர்கள்



அதிபர் - ஆசிரியர்களுடன் தரம் 4 மாணவர்கள்





# மாணவர்களின் அத்திவாரம் ஆரம்பக்கல்வியே

இன்றைய பல்சமுகக் கட்டமைப்பின் கீழ் பாடசாலையில் ஆரம்பக்கல்வியூட்டல் என்பது பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அத்திவாரம் எவ்வாறு முக்கியம் பெறுகின்றதோ. அதே போல மாணவர்களின் சிறந்த வாழ்க்கையைக் கட்டி எழுப்ப அத்திவாரமாக அமைவது ஆரம் பக்கல்வியே.

மாணவர்களின் சிறந்த தளமாகவும் இது விளங்குகின்றது. இதனைக் கருத்திற் கொண்டே 1989இல் ஐ.நாவில் சிறுவரின் கல்வி உரிமை பற்றிய சமவாயத்தில் ஆரம்பக்கல்வி கட்டாயமானது. இக்கல்வி எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

ஐந்து ஆண்டுகள் ஆரம்பக்கல்வியைப் பயிலும் பிள்ளை அறிவு, நடைமுறை வாழ்க்கைத் திறன்கள், கடடுப்பாடு, ஒழுக்கம், பேச்சாற்றல் என்ற விடயங்களில் விருத்தியடையவும் தேர்ச்சி தழுவிய மாணவர்மையக் கலைத்திட்டத்தின் ஊடாக தொடர்பாடல், சூழல், சமயமும் ஒழுக்கமும், விளையாட்டும் ஓய்வும், ஆளுமை விருத்தி, கற்பதற்குக் கற் றல், வேலை உலகிற்கு தயார் செய்தல் போன்ற தேர்ச்சிகளினூடாக எதிர்கால வாழ்வை எதிர் நீச்சல் போட ஆரம்பக் கல்வியே அத்திவாரமாக அமைகின்றன.

சூழலையும், சூழலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளையும் திட்டமிட்டுக் கட்டமைப் பதன் மூலம் கல்வியில் விருப்பார்வ நிலமை உருவாக்கப்படுகின்றது. பிள்ளைகளுக்கென்று பொது வாயுமைந்த தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் அறிவு, திறன், மனப் பாங்கு அடிப்படைகளை விளங்கிக் கொண்டு கட்டமைக்கப்பட்ட சூழலை உருவாக்கி ஒழுங்கமைத்த முறைகளுக்கூடாக கட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகின்ற அத்திவாரமாக ஆரம்பக்கல்வி அமைவதால் மாணவர்களின கல்வியிலே முக்கிய இடம் பெறுகின்றது.

வெளிநாட்டுக்கல்வி முறையினை எடுத்து நோக்கும் போது அங்கு ஆரம்பக்கல்விக்கே சிறப்பிடம் வழங்கப்பட்டிருப்பதை காண முடிகின்றது. அங்கு மாணவர்கள் செய்து பார்க்கும் செயன்முறைக் கல்வியினையே ஆரம்பக்கல்வியில் கணனியுடன் பயன்படுத்தி வருவதையும் மாணவர்களின் சுதந்திரமான கற்றலுக்கு வழிவகுக்கும் நுட்பங்களை ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பயன்படுத்துகின்றனர்.

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்ற பழமொழியை எடுத்துக் கொண்டால் ஆரம்பக்கல்வி கற்கும் மாணவர்கள் 5வயது தொடக்கம் 10வயது வரையிலான மாணவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் ஆரம்ப பருவத்திலே பின்பற்றுதல், போலச் செய்தல், அதிக விடயங்களை உள்வாங்கும் திறன் போன்றன இருப்பதனால் அவர்களின் வாழ்வின் அத்திவாரமாக ஆரம்பக்கல்வி திகழ்கின்றது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

*திருமதி ப.நிரஞ்சன்*
*ஆசிரியர்*

# பாடசாலையும் சமுகமும்

பாடசாலையின் நுழைவாயில் சமுகத் திற்காக திறந்து வைக்கப்படுகின்றது. என்பது ஓர் கருத்து. அக் கருத்தை நாம் ஆழமாக எடைபோடின் எமது வட்டுமேற்கு அ.மி.த.க. பாடசாலைக்கு பொருத்தமானதே. இப்பாடசா லையின் அதிபர், ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பூரணமாக அமை கின்ற போதும் எம் சமுகத்தில் வாழும் கணிசமான பெற்றோர்களே பாடசாலையின் நுழைவாயிலுக்குள் உட்செல்ல முனைகின் றனர். ஏனையோர் ஏனோ தானோ என்ற அலட்சியப் போக்கினால் தம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளை கூட அறிய முற்படுவதில்லை. எனவே இச் சந்தர்ப்பத்தில் எனது சமுகத்தில் வாழும் அனைத்துப் பெற்றோரும் இப் பாடசாலையின் முன்னேற் றத்திற்காக தங்களால் இயன்றவற்றை செய்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை யளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பாடசாலை அபிவிருத்திச்**
**சங்கச் செயலாளர்**
**திருமதி ப. கமலாதேவி**

---

# My School

My School name is J/Vaddu west A.M.T.M. School. It is in Vaddukoddai. My School Colour is green and yellow. My School emblem is Veenai. My School was started in 1909.

There are about Eighty students in my school. We have classes from year one to year five. Our principal is Mr. A. Stephen Rex.

Our principal and teachers are all kind and painstaking.

The motto of our school is 'Behave as learned'. I enjoy the occasions such as our Sports meet, Teacher's day and Religious Festivals. I am very proud of my School.

***R. Kajenthini***
***Grade - 5***

# Effective Time Management for Excellent Performance

"Time is the scarce resource unless it is managed, nothing else can be managed". Time is a unique resource. Day after day, every one has the same amount. It cannot be accumulated. We cannot turn it on and off. It cannot be replaced. Man has no control on time. It is being spent whether we like it or not.

Time management is a discipline that everyone acknowledge its worth while simultaneously ignoring it there seems to be something in the human spirit that rebels against the time management. Despite realizing the benefits. It's rather like eating the right food. We can acknowledge all the benefits of eating lots of fruits and Vegetables. We can even enjoy eating Vegetables and still pick out on junk food.

This ability to ignore time management is very sad. There are plenty of variations on the theme of "so much to do, so little time to do it in; few of us have time to get every thing we really want to complete. Few of us manage effectively balance work and home life. Business and pleasure, stress and stress relief. Good time management is more than a nit-picking discipline that will appear to those who like everything in its place; it is a vehicle for getting more done and having a better life if only it can be made practical.

Time is not amenable to management nor to argument; it continues to tick away at an irritating constant sixty seconds a minute for sixty minutes per hour.

Many of us claim our days are never wasted "I am very organized" we say "I know where I am going and what I am going to do" if you truly feel that way then you are in the minority most people become wasted with a day that is unproductive. We would all like to get more done in a day.

The idea of time management has been in existance for more than 100 years. Unfortunately the term "Time management creates a false impression of what a person is able to do. Time can't be managed, time is uncontrolable, we can only manage ourselves and our use of time.

Time management is actually self management; its interesting that skills we need to manage other are the same skills we need to manage ourselves the ability to plan, delegate, organize, direct and control.

### There are common time wasters which need to be identified.

In order time management process to work, it is important to know that aspects of our personal management need to be improved. Before that you will find some of the most frequent reasons for reducing effectiveness in the work place. Tick the "ones which are causing to be major" obstacles to your own time management; these we refer to as your "time stealers".

## Identifying your time stealers

- Interruptions in telephone
- Interruptions in personal visitors
- Meetings
- Ineffective delegation
- Procrastination and indecision
- Dealing with the team members
- Crisis management
- Unclear communications
- Inadequate technical knowledge
- Unclear objectives and priorities
- Lack of planning
- Stress and fatigue
- Inability to say "No"

## Strategies to effective time management

1. Always define your objectives as clearly as possible. Goals should be determined. One of the factors which more out successful people is their ability to workout what they want to achieve and have written goal which they can review constantly. Your long term goal should impact on your daily activities and be included on your "to do". List without a goal or objective people tend to just drift personally and professionally.

2. *Analysis your time*

   Are you spending enough time in your Project if you are constantly asking your self "what is the most important use of my time. Now?" It will help you to focus "on important task" and stop reacting to tasks which seem urgent but carry no important todays.

3. *Have a plan*

   Without plan one cannot achieve goals most people know what but they want have no plan to achieve it except by sheer hand work. Your early plan should be reviewed daily and react as your achievement are met.

4. *Action plan analysis*

   Problems will always occur, the value of a good plan is to identify them early and seek out solutions. Good time management enables you to measure the progress towards your goals become "what you can measure. You can control always try to be" proactive.

## Keys to effective time management

- Write out the time budget in the morning.
- Do time audit at night
- Keep-work ready for Staff before office starts.
- Allot work to staff early in the morning.
- Correspondence update.
- Keep paper ready for discussion with visitors.
- Converse with visitors without waste of time.
- Speak on phone in points.
- Prepare an agenda for committee meetings.
- Read daily papers for 15 minutes.
- Devote 30 minutes for general reading.
- Use book to read while waiting.
- Spend some time with your family.
- Devote some time to thinking.
- Getup early morning / late night.
- Do some physical exercise in morning / evening.

## How effectively do you use your time now?

Before you start to plan you are going to get more control over your time. It is important to identify which areas in the most urgent need if attention. Putting the issues into an order priority and dealing with the most pressing ones first will make your action plan.

| | Urgent | Not Urgent |
|---|---|---|
| Important | 1 | 2 |
| Not-Important | 3 | 4 |

## Benefit of time management

- Manage the priorities
- Increase the work effectiveness productivity.
- Enjoy more balanced life style.
- Feel more in control of their daily activities.
- Reduce the stress which results from a lack of effective time planning.
- Reduce problems from your head.
- Avoid the failure to meet work objectives.
- Avoid wasting time and forget to do important things.

## Conclusion

Time management is not a hard work to understand but unless you are committed to build time management techniques into your daily routine, you will only achieve partial (or no) results and then make comments such as "I tried time management once and it does not work for me" by setting goals and eliminating time wasters and doing this every day, you may find you will have extra time in the week to spend on those people and activities most important to you.

*N. Malathy*
*Teacher*

---

## சிந்தனைத் துளிகள்

- அமைதியைவிட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை.
- அதிகம் பேசுபவர்கள் செயல்வீரர்களாக இருப்பதில்லை.
- நல்லவற்றை பாறையில் எழுது தீயவற்றைப் பனிக்கட்டியில் எழுது.

# ஆங்கிலக்கல்வியின் அவசியம்

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஔவை வாக்காகும். இளமைப் பருவத்திலே நாம் பாடசாலைக்கு சென்று கல்வி கற்றல் அவசியமாகும். இளமைப்பரு வத்திலே தமிழோடு ஆங்கிலக் கல்வியையும் கவனமாகக் கற்று சிலைமேல் எழுத்துப் போல அழிக்க முடியாததாகப் பதித்தல் வேண்டும். சிறுவயதில் கற்கின்ற கல்வி நமது உள்ளத்தில் நன்றாகப் பதிகின்றது. "தூய்மையானதும் புதியதுமான துணியில் சாயம் நன்றாகப் பதிவதைப் போல" இளமையில் ஆங்கிலத்தைக் கற்க வேண்டும். எனவே தான் இளமைப்பருவத்தை கல்விக் குரிய பருவமாக்கினார்கள்.

"இலட்சியமற்ற மனிதன் மிருகத்திற்கு சமமானவன்" என்பது சுவாமி விவேகானந் தரது கருத்து. ஒவ்வொரு மனிதனுக்கும் ஓர் இலட்சியம் அவசியம். அந்த இலட்சியத்தை அடைய பக்க பலமாகக் கை கொடுப்பது ஆங்கில மொழி என்றால் மிகையாகாது. உலகில் பொது மொழியாக ஆங்கிலம் காணப்படுகின்றது.

இன்று சர்வதேச அரங்கில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் நாம் இணையத் தின் மூலம் விரிவாக அறிந்து கொள்வதற்கு ஆங்கில மொழியே பயன்படுகிறது. இன் றைய உலகில் அடிக்கடி விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் நிகழ்கின்றன. நிலாவைக் காட்டி குழந்தைக்கு அன்னம் ஊட்டிய காலம் மாறி சந்திரனில் காலடி வைத்தது மாத்திர மன்று அதனையும் மிஞ்சி செவ்வாயில் செயற்கைக் கோள் இறங்கியது வரை விஞ்ஞானத்தின் சாதனைகள் பல ஆகும். இவற்றை உடனுக்குடன் அறியவும் அவை பற்றி விரிவான ஆராய்ச்சிகளையும், ஆய்வு களையும் மேற்கொள்ளவும் ஆங்கில மொழி யில் காணப்படும் நூல்கள், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுமே உதவுகின்றன.

இன்றைய இளைஞர்கள் அதிவிவேகிகள் அவர்களிற்கு தேவையான அறிவைப் பெற தமிழ்மொழியில் போதியளவு அறிவியல் நூல்கள் காணப்படுவதில்லை. அவர்களின் ஆராய்ச்சிக்குத் தமிழில் உள்ள நூல்கள் "யானைப் பசிக்கு சோளப் பொரி" போன்றே உதவுகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

எமது அரசு இன்று ஆங்கில மொழியை கட்டாயமாக்கியுள்ளது. இன்று உலகம் சுருங்கிவிட்டது. மனிதன் தன் இடத்திலிருந் தவாறே வேலைகளைச் செய்து முடிப்பதற்கு கணனிகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இவற்றை பயன்படுத்த ஆங்கில மொழியே உதவுகின்றது. இவற்றிற்கான விரிவுரைகள் ஆங்கில மொழியிலேயே ஆக்கப்படுகின்றன. இன்று பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங் களிலும் கூட பாடங்கள் ஆங்கில மொழியி லேயே விரிவுரைகள் நடைபெறுகின்றன.

மாணவர்கள் பல்வேறு துறைகள் ரீதியாகவும் தகவல்களையும் பல நூல்களின் வாயிலாகத் திரட்டக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தகவல்களைப் பெற தமிழில் காணப்படும் நூல்களை விரல் விட்டு எண்ணலாம். ஆனால் ஆங்கில மொழியில் இத்தகைய நூல்கள் அதிகமாகக் காணப்படு கின்றன. இன்றைய கல்வியை எடுத்து நோக்கினால் ஆங்கிலம் தெரிந்த மாணவனே முதன்மை மாணவனாகத் திகழ்கின்றான். நாம் உலகின் எப்பாகத்திற்குச் சென்றாலும் எவருடனும் சரளமாக ஆங்கிலத்தில் உரை யாடமுடியும். ஏனைய மொழிகளில் உரை யாடமுடியாது. இலத்திரனியல், வர்த்தகம்

போன்றவற்றை கையாள ஆங்கில மொழியே உதவுகின்றது. ஆங்கிலம் கற்ற மனி தனே பூரண மனிதனாக இன்றைய உலகில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இன்றைய உலகில் மனிதனுடன் பின்னிப் பிணைந்துள்ள விஞ்ஞானமும், தொழில்நுட்ப மும் ஆங்கில மொழியின் உதவியுடன் எமக்கு கிடைத்தவையே. இன்று உலகில் அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ள இணை யத்தின் மூலம் உலகில் ஓர் மூலையில் உள்ள பல்வேறு நபர்களுடன் தொடர்பு கொள்ள நாம் ஆங்கிலமொழியையே பயன்படுத்த வேண்டும்.

வளர்ச்சியடைந்த நாடுகளிற்கு சமமாக எமது நாட்டை மாற்றவும் சர்வதேச அரங்கில் நாம் பிரகாசிக்கவும், நவீன இலத்திரனியல் தொழில்நுட்ப சாதனங்களைக் கையாண்டு எமது வேலையை இலகுவாக்கி நேரத்தை மீதப்படுத்தவும், இணையத்தின் மூலமாக எமது செயற்பாடுகளை ஆற்றவும், உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் நிறைந்த அறிவைப் பெறவும் ஒரு மனிதன் பூரண மனிதனாக வாழ்வதற்கு ஆங்கிலக் கல்வி அவசியமாகின்றது.

**திருமதி ஜெயசிறி கண்ணதாசன்**
**ஆசிரியர்**

---

# ஜோக்ஸ் (நகைச்சுவை)

**ஆசிரியர்** : மனிதனாகப் பிறந்தால் ஏதாவது சாதிக்க வேணும்

**மாணவன்** : நல்லவேளை சேர் நான் பிறக்கும் போது குழந்தையாகத் தான் பிறந்தேன்.

**ஆசிரியர்** : 100ல்ஒன்று போனால்மிதி எவ்வளவு?

**மாணவன்** : "00" ரீச்சர்

**ஒருவர்** : சரியாக 10.00 மணிக்கு காரியால யத்தில் நிற்கலாம் என்றால் முடி யவே முடியாதே.

**மற்றவர்** : ஏன் காரியாலயம் றொம்ப தூரமோ

**ஒருவர்** : அது இல்லையப்பா வேலை கிடைச் சாத்தானே போக முடியும்.

**மாலா** : தூங்கும்போது சிலர் குறட்டை விடு கின்றார்களே அது ஏன்?

**கலா** : முழிச்சிருக்கும் போது குறட்டை விட முடியாதே, அதனால் தான்.

**அப்பு** : கிளினிக்கை ராத்திரி மூடும்போது அந்த டாக்டர் தேசியகீதம் பாடு றாரே ஏன்?

**சுப்பு** : அவர் ஒரு நாட்டுவைத்தியராக்கும்

**ஆசிரியர்** : நம்மால் மற்றவர்கள் "வசுவு" வாங் கும் அளவிற்கு நாம் நடக்கக்கூடாது

**மாணவர்** : ரீச்சர் அந்த ரவியிடம் நன்றாய்ச் சொல்லுங்கள் அவன் வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருவதால் என் அப்பாவிடம் நான் திட்டு வாங்க வேண்டியிருக்கு.

**மகன்** : வயிறு வலிக்குதம்மா

**அம்மா** : அழாதேடா கண்ணா வயிறு வெறு மையாக இருக்கு அதுதான் வலிக்குது

**மகன்** : அப்போ அப்பா தலைவலி என்று படுத் திருக்கிறாரே தலையிலே ஒன் றுமே இருக்காதா அம்மா.

# குறும்ப மட்டப் போட்டி முடிவுகளின் விபரம்

| வருடம் | பெயர் | நிகழ்வு | வகுப்பு | நிலை |
|---|---|---|---|---|
| 2007 | இ.பவித்திரா | வாய்ப்பாடு மனனம் | தரம் 5 | 3 |
| 2008 | சு.கஜீவனா | திருக்குறள் மனனம் | தரம் 1 | 1 |
| 2008 | தே.சனுஜன் | திருக்குறள் மனனம் | தரம் 1 | 2 |
| 2008 | மோ.தேவயாழினி | திருக்குறள் மனனம் | தரம் 5 | 3 |
| | | | | |
| 2009 | செ.கஜனிகா | திருக்குறள் மனனம் | தரம் 2 | 2 |
| 2009 | ப.கஜரூபன் | திருக்குறள் மனனம் | தரம் 3 | 1 |
| 2009 | ப.நிலாந்தினி | வாய்ப்பாடு மனனம் | தரம் 3 | 1 |
| 2009 | செ.திினேஸ் | கோலம் போடுதல் | தரம் 5 | 2 |

கோட்ட மட்டத்திலும் மாணவர்கள் தமது திறனை வெளிப்படுத்தியுள்ளனர். தரம் 1 மாணவியான சு.கஜீவனா திருக்குறள் மனனப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். 2008 இல் தரம் 4 மாணவியான இ.கஜேந்தினி சஞ்சிகையாக்கப்போட்டியில் முதல் 5 இடங்களுள் ஒன்றைப் பெற்றுள்ளார். அவ்வாறே, 2008இல் தரம் 2 மாணவியான ப.நிலாந்தினி பெற்றுள்ளார்.

# உடலை நலிவடையச் செய்யும் காசநோய்
# TUBERCULOSIS

காச நோயானது Mycobacterium எனும் பக்ரீரியாவினால் ஏற்படுகிறது. இது ஒரு சுவாசம் மூலம் பரவும் (Air borne)தொற்று நோயாகும் காசநோயாளி இருமும் போதும் தும்மும் போதும் வெளியிடப்படும் பக்ரீரியாக்களைக் கொண்ட நீர்த்துணிக்கைகள் (proplets)வளியில் விடப்படும். இவற்றை சுவாசிக்கும் சுகதேகி ஒருவருக்கு இந்நோய் ஏற்படலாம். ஒருசுகதேகி நோய்த் தொற்றுக்குள்ளாவது என்பது எவ்வளவு நேரம் காசநோயாளியுடன் தொடர்புபடுகிறார் என்பதிலும் எவ்வளவு நோய்க்கிருமிகளை உள்ளெடுக்கின்றார் என்பதிலும் அவரினுடைய நோய் எதிர்ப்பு சக்தியிலும் தங்கியுள்ளது. நெருக்கமான குடிமனைகளில் வாழ்பவர்கள், பரப்புகுறைந்த சிறிய வீடுகளில் நெருக்கமாக வாழ்பவர்கள், காற்றோட்டம் வெளிச்சம் குறைந்த வீடுகளில் வாழ்பவர்கள், தொழிற்சாலை அலுவலகங்களில் குளிரூட்டியில் வேலை செய்பவர் களுக்கு அதிகமாக இந்நோய் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளது. மதுபாவிப்போர், போதைப் பொருட்கள் பாவிப்போர், புகைப்பிடிப்பவர்கள், சலரோக நோயாளிகள், போசாக்கு குறைபாடு உடையோர் எயிட்ஸ் நோயாளிகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களிடையே அதிகம் ஏற்படுகின்றது.

சாதாரணமாக ஒரு காசநோயாளியால் ஆண்டொன்றிற்கு 10-15 பேருக்கு நோய்த் தொற்றலை ஏற்படுத்துவார். நோய்த்தொற்று ஏற்பட்டவர்களில் 10% ஆனோர் நோய்வாய்ப்படுகிறார்கள். நோயறிகுறிகள் ஏற்பட்டவர்கள் சிகிச்சை பெறாவிடின் 50% ஆனோர் இறக்கின்றனர். காசநோய் 80% அளவில் சுவாசப்பையையே தாக்குகின்றது. நகம், பல், தவிர்ந்த ஏனைய உடலின் பாகங்களை தாக்கக்கூடியது.

**நோயறிகுறிகள்**

(1) தொடர்ச்சியாக மூன்று கிழமைக்கு மேல் இருமல் காணப்படும்.
(2) சளியுடன் இரத்தம் வெளிவருதல்
(3) இரவு நேரத்தில் மெல்லிய காய்ச்சல்
(4) உடற்பருமன் குறைவடைந்து செல்லும் (உடல்மெலிதல்)
(5) உணவில் நாட்டமின்மை/ விருப்பமின்மை
(6) இரவு நேரத்தில் அதிக வியர்வை ஏற்படல்
(7) அதிக களைப்பு

**காசநோய் ஏற்பட்டுள்ளதென்பதை அறிந்து கொள்வதற்கு**

(1) மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் ஒருவருக்கு காணப்பட்டால், உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அல்லது பண்ணையில் உள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்குச் சென்று சளிப்பரிசோதனை செய்து சளியில் கிருமிகள் உள்ளதா என்பதை கண்டறியலாம்.
(2) மேலும் காசநோயைக் கண்டறிவதற்கு X -Ray எக்ஸ் கதிர் பரிசோதனை செய்யப்படும். மார்புப்பகுதியை எக்ஸ் கதிர்மூலம் படம் பிடித்து நுரையீரலில் கிருமியின் தாக்கம் உள்ளதா எனக் கண்டறியலாம்.

**(3) மாண்டு பரிசோதனை**

காசநோயைக் கண்டறிவதற்கு மாண்டு எனும் பரிசோதனை செய்யப்படும். ஊசி மருந்து ஒன்றினை உடலினுள் செலுத்துவதன் மூலம் ஊசி ஏற்றப்பட்ட இடத்தில் ஏதாவது

ஒவ்வாமைத்தாக்கங்களான பரு ஏற்படுதல், கடி, எரிவு, ஏற்படுகின்றதா என அவதானித்தல். உடலில் காசநோய் பக்ரீரியா இருப்பின் ஒவ்வாமைத்தாக்கம் ஏற்படும்.

இப்பரிசோதனைகள் யாவற்றையும் யாழ்ப்பாணத்திலுள்ள பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சை பிரிவில் அல்லது அரசாங்க வைத்தியசாலையில் இலவசமாக செய்து கொள்ள முடியும்.

**தொற்றலைத் தடுக்கும் முறைகள்**

(1) நோயாளியை தாமதமின்றி நோய் நிர்ணயம் செய்தல்.
(2) நோயாளிக்கான சிகிச்சையை தாமதமின்றி பெற்றுக் கொடுத்தல்.
(3) இருமும் போதும், தும்மும் போதும் கைக்குட்டையினால் அல்லது துணியினால் வாய்ப்பகுதி, மூக்குப்பகுதியை மூடிக்கொள்ளல் வேண்டும்.
(4) நோயாளி கண்ட கண்ட இடங்களில் சளியைத்துப்புவதை தவிர்த்து, பாத்திரம் ஒன்றில் சளியைச் சேகரித்து கிருமி கொல்லிகளை இட்டு பாதுகாப்பாக புதைத்து அல்லது எரித்துவிடல் வேண்டும்.
(5) நோயாளியை காற்றோட்டமான, வெளிச்சமான இடத்தில் ஓய்வெடுக்க அனுமதித்தல் வேண்டும்.
(6) போசாக்கான உணவு, நீராகாரங்களை உள்ளெடுக்க வேண்டும்.
(7) காலந்தவறாத மருத்துவ பரிசோதனை செய்தல் வேண்டும்.

**சிகிச்சை**

மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் ஆறு மாதங்கள் தொடர்ந்து சிகிச்சை பெறுவதனால் இந்நோயிலிருந்து முற்றாக குணமடையலாம்.

மருந்து உள்ளெடுக்க ஆரம்பித்துவிட்டு இடையில் நிறுத்தப்பட்டால் உடலிலிருக்கும் நோய்க்கிருமிகள் மீண்டும் பெருக்கமடையும்.

அத்துடன் இந்நோய்க்கிருமிகள் மருந்திற்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டும். இதனால் நோய்குணமடையாது இறக்க நேரிடும்.

**சமூகப்பங்களிப்பு**

காசநோய் அறிகுறிகள் உள்ள ஒருவரைக் கண்டால் அவரை அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்கு அல்லது மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு செல்வதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

காச நோயாளியை சமூகத்திலிருந்து தனிமைப்படுத்துவதைத் தவிர்த்து, அவரை சமூகத்தில் ஒருவராக ஏற்றுக்கொண்டு நோய்குணமடைவதற்கு உதவிபுரியுங்கள்.

நோயாளி தவறாது பூரண சிகிச்சை பெறுவதற்கு ஊக்கமளியுங்கள்

*“காசநோய் ஒரு பரம்பரை நோயல்ல.”*

**திரு. சோ. ரூபதாஸ்**
**பொது சுகாதார பரிசோதகர்**
**வட்டுக்கோட்டை.**

நூற்றாண்டு விழா மலரிற்கு எமது வாழ்த்துக்கள்

# ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்



சகலவிதமான பாடப் புத்தகங்கள்

காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள்,

மருத்துவ புத்தகங்கள், மருத்துவ உபகரணங்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் நியாய விலையில்

பெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

இல. 212, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

தொ. பே : 021 222 5542

---



நூற்றாண்டு விழா மலரிற்கு எமது வாழ்த்துக்கள்

# இ. ச. பே. நாகரத்தினம் சக நிறுவனம்

# E.S.P.N & Co




ISO 9001 சான்றிதழ் பெற்ற புதிய கீரோ மிதிவண்டிகள்,

புதிய லுமாலா துவிச்சக்கர வண்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள்,

வானொலிப்பெட்டிகள், சீடி டெக் வகைகள், கசற் றேடியோக்கள்,

டிஸ் அன்ரனா வகைகள், மிக்சி வகைகள், றைஸ் குக்கர்,





அவண் வகைகள், சாஜ்சர் லைற் வகைகள்

அனைத்தையும் ஒரே காட்சி அறைகளில் பெற்றுக் கொள்ள

நாட வேண்டிய ஒரே இடம்

52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 021 222 3099, Fax: 021 222 4394
E-mail . ESPN.Jf@Hotmail.com

நூற்றாண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

# அம்பாள் குறோசரீஸ்



எங்களிடம் பலசரக்குப் பொருட்கள், சில்லறை சாய்ப்பு பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், கோவிலுக்குரிய அபிஷேக பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

பாடசாலை நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கான வாழ்த்துக்கள்

# சச்சியா இரும்பகம்

வீட்டை நிர்மாணிப்பதன் முன் எம்முடன் கலந்தாலோசியுங்கள்

கட்டடப் பொருட்கள்

இரும்புப் பொருட்கள்

பெயின்ற் வகைகள்

எஸ்லோன் பைப் வகைகள்

ஆகியவற்றை நியாய விலையிற் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

வட்டுக்கோட்டை

நூற்றாண்டு விழாவுக்கு எமது வாழ்த்துக்கள்

# நாயகி மிக்சர்ஸ்

மிக்சர்

கச்சான் அலுவா

எள்ளுருண்டை

பல்வேறு வகையான இனிப்புப் பண்டங்களையும்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**2006, 2007 இல்**

**ஜனாதிபதி விருது பெற்ற**

**நிறுவனம்**

**நாயகி மிக்சர்ஸ்**

**வட்டுக்கோட்டை**

பாடசாலை நூற்றாண்டு விழா மலரிற்கு எமது வாழ்த்துக்கள்

# நியூ குமார் அரைக்கும் ஆலை

**நம்பிக்கை, நாணயம்**

**குறைந்த செலவில் நிறைந்த பயன்**

**தானியங்கள், மிளகாய் உடனுக்குடன்**

**அரைத்துக் கொடுக்கப்படும்**

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு

# 100 வது ஆண்டு நிறைவு மலர் இளந்தளிர் சஞ்சிகைக்கு எமது நிறைவான வாழ்த்துக்கள்

* மளிகைப் பொருட்கள்
* பாடசாலை உபகரணங்கள்
* கட்டடப் பொருட்கள்
* அபிஷேகப்பொருட்கள்






மற்றும் தேவைகளை நிறைவு செய்திட ஒரே கூரையின் கீழ்
மலிவான விலையில் தரமான பொருட்களைப்
பெற்றுக் கொள்ளுங்கள்

# அம்பாள் ஸ்ரோஸ்

**கனகலிங்கம்**
**உரிமையாளர்**

அக்கின்சன் றோட்,
வட்டுக்கோட்டை.

# ARUNALU Minors' Savings Account



## The Perfect Gift for your Child

- Higher rate of interest
- Minimum initial deposit Rs 100/=
- Special Prizes for year 05 Scholarship Winners,
  - Cash prizes for FIRST 3 places in each school
  - Double the account balance for each District winner

ARUNALU

COMMERCIAL BANK

www.combank.com
email @ combank.net